In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள் மிகு சுந்தரேஸ்வர ஸ்வாமி திருக்கோயில்

திரைலோக்கிய சுந்தரம்

திருத்தல வரலாறு

பன்னிருதிருமுறை பஞ்சபுராணத்திரட்டு

தொகுத்தவர் :

ஜி. கிருஷ்ணரத்னம்

ப்ளாட் எண் 5, காமகோடி, கதவு எண். D.158/159இ இரண்டாம் மெயின்
ரோடு, ஹிந்து காலனி, நங்கநல்லூர், சென்னை – 600 061.
போன் 044–2232 3095, செல்: 94442 92837

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள் மிகு சுந்தரேஸ்வர ஸ்வாமி திருக்கோயில்

திரைலோக்கிய சுந்தரம்

திருத்தல வரலாறு

பன்னிருதிருமுறை பஞ்சபுராணத்திரட்டு

தொகுத்தவர் :
ஜி. கிருஷ்ணரத்னம்

ப்ளாட் எண் 5, காமகோடி, கதவு எண். D.158/159இ இரண்டாம் மெயின் ரோடு, ஹிந்து காலனி, நங்கநல்லூர், சென்னை – 600 061.
போன் 044–2232 3095, செல்: 94442 92837

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள் மிகு சுந்தரேஸ்வர ஸ்வாமி திருக்கோயில்
திரைலோக்கிய சுந்தரம்
திருத்தல வரலாறு

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் வட்டத்தில், வடவாறும், இராமனோடையும் இருபக்கமும் தழுவிச் செல்லும் வண்ணம் நடுவில் பொலிவுற விளங்கும் திருத்தலம், திரைலோக்கிய சுந்தரம். தற்போது திரிலோக்கி, திரைலோக்கி என்றும் அழைக்கப்பெறுகிறது.

திருப்பனந்தாள் என்னும் ஊரிலிருந்து தென்கிழக்கில் 5 கி.மீ. தூரத்திலும், துகிலி என்ற ஊரிலிருந்து வடமேற்கில் 5 கி.மீ. தூரத்திலும் உள்ளது இந்தச் சிற்றூர். நவக்கிரகத் தலங்களான, திருமங்கலக்குடி, சூரியனார் கோயில், மற்றும் கஞ்சனூர் இவைகளுக்கு வெகு அருகாமையில் உள்ளது. கும்பகோணம், மயிலாடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய ஊர்களிலிருந்து இவ்வூருக்குப் பேருந்து வசதி உண்டு.

அப்பர் பெருமான் தன் க்ஷேத்திரக் கோவை திருத்தாண்டகத்தில் இத்தலத்தை, "எச்சில் இளைமர் ஏம நல்லூர் இலம்பையங் கோட்டூர்" என்றும் குறிப்பிடுகிறார். கருவூர்த் தேவரின் திருவிசைப்பா பெற்ற தலம். "கோடைத் திரை லோக்கிய சுந்தரனே!" என்று மகுடம் அமைத்து இறைவனைப் பாடுகிறார்.

தலப்பெயர்

தஞ்சைப் பெரிய கோயில் கட்டிய முதலாம் இராஜராஜன் மனைவியருள் ஒருவர் திரைலோக்கிய மாதேவி. இங்குள்ள இறைவன் பெயர், சுந்தரர். இரண்டையும் சேர்த்து 'திரைலோக்கிய சுந்தரம்' என இவ்வூர் பெயர் பெற்றது. திரைலோக்கிய மாதேவி சதுர்வேதி மங்கலம் என்று முன்பு அறியப்பட்டது. இவ்வூர், மன்னி நாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்கிய மாதேவிச் சதுர் வேதி மங்கலம் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது.

ஆலயங்கள்

இங்கு பிரசித்தி பெற்ற கோயில்கள் மூன்று. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத சுந்தரேச்வரர் எழுந்தருளிய திருலோக்கிய சுந்தரம். இது முதலாம் இராஜராஜனால் கட்டப்பட்ட கோயில்.இதன் கிழக்கே முதலாம் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட கைலாச நாதர் கோயில். தென் கிழக்கில் அருள்மிகு க்ஷீராப்தி சயன நாராயணப் பெருமாள் கோயில். இவை தவிர இவ்வூரில் மாரியம்மன், காளியம்மன், அய்யனார், விநாயகர் திருக்கோயில்கள் உண்டு.

தீர்த்தங்கள்

இத்தலத்தில் மானச தீர்த்தம், லட்சுமி தீர்த்தம், வருண தீர்த்தம் என மூன்று தீர்த்தங்கள் இருந்தன. தற்போது, லட்சுமி தீர்த்தம் மட்டுமே திருக்கோயிலின் தென்கிழக்கே உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தல விருட்சம்

இத்தலத்தின் ஸ்தல விருட்சம் சரக்கொன்றை. இது இக்கோயில் நந்தவனத்தில் உள்ளது.

இத்தலத்தை வழி பட்டோர்

பிருகு முனிவர், தேவகுருவாகிய பிரகஸ்பதி, சுகேது, ரதிதேவி, கருவூர்த் தேவர், தருமன் ஆகியோர் இத்தலத்து இறைவனைப் பூஜித்து முக்தி அடைந்துள்ளார்கள். சுகேது என்பவருக்கு நீங்காத தலைவலி நீங்கப் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

பரிகாரத் தலம்

இந்தத் தலம் ஒரு விசேஷ பரிகாரத் தலம் எனலாம். தடைப் பட்ட திருமணமும் மக்கட் பேரும் சித்திக்கிறது என்பது இங்கு அனுபவ உண்மை. மேலும், குரு ஒரு ஜாதகத்தில் மறைந்திருந்தாலோ, பகை வீட்டில் இருந்தாலோ, இந்தத்தலத்து இறைவனிடம் வந்து கைதொழுதால் குருபகவானருள் சித்திக்கும் என்பார்கள். ஏனென்றால் குருபகவானே இத்தலத்தில் ரிஷபாருடரைக் கைகூப்பித்தொழுது நிற்கிறார். ரதி, மன்மதனைத் திரும்பப் பெற்ற இடமாதலால், சிறந்த மாங்கல்ய தோஷப் பரிகாரத் தலமாய் விளங்குகிறது.

புராண வரலாறு

திருவிடை மருதூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மஹாலிங்கேஸ்வரரை குருபகவான் வழிபட்டார். மஹாலிங்கர் அவர் முன் தோன்றி குருபகவானின் பாவங்கள் தீர திருவிடை மருதூருக்கு ஈசான்ய திசையில் அமைந்துள்ள திரைலோக்கிய சுந்தரனை வழிபட்டால் பாபம் அகலும் என்று பணித்தார். குருவும் இத்தலத்துக்கு வந்து தவம் இயற்றியபோது மார்கழி மாதம் திருவாதிரை நன்னாளில் தேவர்களும் பூதகணங்களும் புடை சூழ ரிஷப வாகனத்தில் சுந்தரேஸ்வரர் அகிலாண்டேஸ்வரியை ஆலிங்கனம் செய்தவாறு காட்சி தந்து பாபவிமோசனம் பெற்றார் என்பது புராணத்தில் சொல்லப்பட்ட வரலாறு. சிவ பெருமான் தன் நெற்றிக் கண்ணினால் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியதைக் கண்ட ரதிதேவி, இறைவனிடம் தன் கணவனுக்காக உயிர்ப் பிச்சை வேண்டினாள்.மன்மதனை எரிந்துத் தகனம் செய்த தலம் திருக்கொற்கை ஆகும். திருக் கொற்கை சிவபிரானின் அட்ட வீரட்டானத் தலங்களுள் ஒன்று. அப்போது சிவபெருமான் ரதி தேவியை இப்புனித க்ஷேத்திரத்துக்கு வந்து அம்பாளையும், இறைவனையும் வழிபட்டால், ரதி தேவிக்கு மன்மதன் மீண்டும் கிடைப்பான் என்று அருளினார். ரதி தேவியும், அவ்வாறே இங்கு வந்து பூஜித்து மன்மதனை இறைவன் உயிர்ப்பித்து அருளியதாகவும் ஒரு கர்ணபரம்பரைக் கதை உண்டு. இதே வரலாறு, திருச்சிக்கு அருகில் லால்குடியை அடுத்த பூவாளுர் என்ற திருத்தலத்திலும் சொல்லப்படுகிறது என்பது அதிசயமான ஒற்றுமை. மன்மதன் மீ ண்டும் உயிர் பெற்று எழுந்ததால், இது மாங்கல்ய தோஷ நிவர்த்தித் தலமாய் அறியப்படுகிறது.

திருக்கோயில் அமைப்பு

நான்கு பக்கமும் தேரோடும் வீதிகள். நடுநாயகமாக இக்கோயில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
மொட்டைக் கோபுர வாசலை அடுத்து வெளவால் நெத்தி மண்டபம் உள்ளது. அடுத்து உள்ள மண்டபம் 36 துாண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறையின் மையப்பகுதி எண்கோண வடிவில் மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளது.

இந்த மண்டபத்தின் தென்புறத்தில், அகிலாண்டேஸ்வரி என்னும் திருப்பெயரோடு அம்பாள் எழுந்தருளி உள்ளார். இந்த அம்மன் சந்நிதி ஸ்வாமியின் கருவறைக்கு வலப்புறமாய் அமைந்துள்ளது. இதைக் கல்யாணக்கோலம் என்பார்கள். ஒரு சில கோயில்களில் மட்டும் தான் இந்தக் கல்யாணக்கோலம் காண முடியும். முகப்பு வாசலைத்தாண்டி உட்சென்றால், முன் மண்டபத்தில் இருந்து நேரே மூலவரைக் காணலாம். பிரகாரத்தின் இடப்பக்கத்தில், கருவூராரின் திருவிசைப்பாவும், காசிக் கலம்பகப் பாடலும் பொறித்த கல்வெட்டு உள்ளது. கீழ்ப்பிராகாரத்தில் விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமண்யர், நடராஜ சபை, சனி பகவான், சூரியன் சந்திரன் ஆகிய சந்நிதிகளும், திருமேனிகளும் உள்ளன. இப்பிராகாரம் மண்டபமாக அமைக்கப்பட்டுள்ளது. மூன்று பைரவர்கள் சேர்ந்து காணக்கூடிய பைரவத்தலங்களில், இதுவும் ஒன்று. பிட்சாடனரும் உள்ளார்.

மூலவர் கருவறை வாயிலில் துவாரபாலகர்கள் உள்ளனர். சற்றே உயர்ந்த ஆவுடையார் பீடத்தில் சிறிய குட்டையான பாண வடிவில் சுந்தரேஸ்வரர் தரிசனம். ஸ்வாமியின் திரு மேனிக்கு மேல் பிரதோஷ அன்பர்கள் சேர்ந்து அமைத்த ருத்ராட்சப் பந்தல் தொங்கவிடப்பட்டுள்ளது. மகா மண்டபத்தின் வலப்புறம் ரிஷபாரூடர் தரிசனம். குருபகவான் கை கூப்பி நிற்கிறார். இடது புறம் ரதி—மன்மதன். இந்தச் சிற்பங்கள் நம் கண்ணையும் கருத்தையும் கவர்வன.

ரிஷபத்தின் மீது [ரிஷபாரூடராக] ஸ்வாமியும் அம்பாளும் வீற்றிருக்கும் அற்புதமான சிலாரூபம் ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. இச்சிலையின் பின்புறம், சிவலிங்கத்தின் திருமேனி செதுக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் அகிலாண்டேஸ்வரியை அணைத்த விதத்திலும், மன்மதன் ரதியை அணைத்த விதத்திலும் உள்ளது. ரிஷபாரூடரிடம் பாப விமோசனம் பெற்ற குருபகவான் கைகூப்பித் தொழுது நிற்கிறார். பிராகாரத்தில் உள்ள கஜலக்ஷ்மியை இருபுறமும், இரு யானைகள் துதிப்பது போன்ற சிற்பம், ஒரே கல்லில் அமைந்துள்ளது. வடக்குப் பிராகாரத்தில் சண்டிகேஸ்வரர் தனி மண்டபத்தில் உள்ளார். இவருக்கு எதிரே எருமைக்கிடா வாகனத்தில் துர்க்கையம்மங்ன வீற்றிருக்கிறார்.

பூஜைகள் விவரம்

நாள்தோறும் இருகால பூஜைகள் நடைபெறுகிறது. தமிழ்ப்புத்தாண்டு, தீபாவளி, திருக்கார்த்திகை தைப்பொங்கல் ஆகியவை விசேஷமாய்க் கொண்டாடப்படுகின்றன. பிரதோஷ வழிபாடு மிகச் சிறப்பாக நடக்கிறது. சனிப் பிரதோஷம் ஆயிரக் கணக்கானவர் கலந்து இறைவனைத் தொழும் விழாவாக நடக்கிறது. கார்த்திகையன்று, முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடக்கின்றன. இந்தக் கோயிலுக்குச் சுமார் 15 ஏக்கர் நிலம் உள்ளது. ஆனால் வருவாய் நிலுவையில் உள்ளது. பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் உதவியால், இந்த வழிபாடுகளும் நவராத்திரி விழாவும் நடந்து வருகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரு வூடல் திருவிழா

ஆண்டு தோறும் ஆனி மாதம் ஆனித் திருமஞ்சனமும் மார்கழி மாதம் வரும் திருவாதிரையும் நடராஜருக்கு நடை பெற்று வருகிறது. அன்று இக்கோயிலின் உற்சவ மூர்த்திகள் நடராஜரும் சிவகாமியும் தனித்தனி மஞ்சங்களில் பூக்களால் பொலிவுற அழகு மிளிர அலங்கரிக்கப்பட்டு வீதியுலா வருவார்கள். சிதம்பரத்தில் நடப்பது போன்றே திருவாதிரையில் சுந்தர மூர்த்தி நாயனார் சிவகாமி அம்மையாரின் ஊடலைத் தீர்த்து வைப்பதும், நடராஜப் பெருமானையும், சிவகாமி அம்மையையும் ஒன்றிணைப்பதும், அன்றைய விழாவின் சிறப்பான அம்சமாகும். பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடி இந்த விழாவைக் கண்டுகளிப்பார்கள்.

அற்புதச் சிற்பங்கள்

தனியான சிலா ரூபங்களுக்குப் பெயர் பெற்றது திருச்செங்காட்டங்குடி. இந்தச் சிலா ரூபங்கள் அற்புதமானவை. எழில் கொஞ்சுபவை. அதைப்போலவே திரிலோக்கியிலும் ஒரு சிறு சிற்பக் களஞ்சியம் உள்ளது. குருபகவான் பாப விமோசனம் பெற்றவராக நிறைந்த மனத்துடன் நிம்மதிப் பெருமூச்சுடன் கை கூப்பி நிற்கிறார். நல்ல திமிறிய உடற்கட்டோடு காணும் ரிஷபர் மீது சுந்தரேச்வரர் அன்னை அகிலாண்டேஸ்வரியுடன், அவளது தோளின் மீது தன் கரம் படரக் காட்சி தரும் கொள்ளை அழகு நம் மனத்திலிருந்து நீங்காத ஒன்று. இந்தச் சிவபிரானின் பின்புறத்தில் சிவலிங்கத்தின் எழில் தோற்றம். இந்த ரிஷபாரூடரும் ரிஷபமும், வடக்குப் பக்கமாய்ப் பார்த்துள்ளது. தென்திசையை நோக்கி ஆலிங்கன ரூபத்தில் ரதியும், மீண்டும் உயிர்த்தெழுந்த மன்மதனும் உள்ளனர். மன்மதன் கரம் ரதி தேவியை அணைத்து 'இவள் எனக்கே சொந்தம்' என்று சொல்லாமற் சொல்லும் கலைநயம் ரசிக்கத் தக்கது. இவர்களை ஒட்டி இரு புறத்திலும் மாப்பிள்ளைத் தோழனும் பெண்ணின் தோழியுமாக இரண்டு உருவங்கள். இச்சிற்பம் திருவாட்சியுடன் கூடியது. இரண்டு சிற்பங்களுமே ஒரே கல்லால் ஆனது. இந்த மாதிரியான அற்புதச் சிற்பம் அமைந்த தலம், திரிலோக்கி ஒன்றேயாம்.

கருவூர்த் தேவரின் திருவிசைப்பா

கருவூர்த் தேவர் முதலாம் ராஜராஜன் காலத்தவர். தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்தவர். அன்னாரின் திருவிசைப்பாக்கள் பதினொன்றும் [பதிகம் எனப்படும்] இத்திருக் கோயிலுக்கு உள்ளன. முதல் இரு பாடல்கள் தலைவி கூற்றாகவும் மற்றவை தோழி தலைவனிடம் கூறும் கூற்றாகவும் உள்ளன.

இப்பாடல்கள் காந்தாரப் பண்ணில் பாடப்பெற்றவை. இந்த ராகம் இப்போது 'நவரோஜ்' என அழைக்கப்படுகிறது.

பெருமாள் கோயில்

திருலோக்கியின் புகழ் பெற்ற சிவன் கோயிலோடு, அருகே அமைந்துள்ள க்ஷீராப்தி சயன நாராயணப்பெருமாள் கோயிலையும் கண்டுவிட்டே செல்ல வேண்டும். பெருமாள் சயனக் கோலத்தில் காட்சி காணக்காணத் தெவிட்டாத ஒன்று. இந்தக் கோயிலும் பல்லாண்டுகளாய் கும்பாபிஷேகம் இன்றி இருந்தது. தற்சமயம் இக்கோயில் பாலாலயம் ஆகி, புனருத்தாரண வேலைகள் தொடங்கி உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டுகள்

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. இவை இக் கோயிலை எடுத்துக் கட்டிப் புனருத்தாரணம் செய்யும்போது இடம் மாறியுள்ளன. இவற்றில் சில கல்வெட்டுக்களுக்குப் படி எடுக்கப்பட்டுள்ளது.

இக் கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ளது. இக்கோயிலின் கும்பாபிஷேகம் 1967 ம் ஆண்டு ஆனதாய்த் தெரிகிறது. விரைவில் கும்பாபிஷேகம் செய்ய இந்த ஊர் சுற்றிலும் உள்ள ஊர் மக்கள் வெகு ஆர்வத்துடன் உள்ளார்கள்.

இந்தப் புராதனமான கோயில்கள் பற்றி பக்தர்கள் அறிய வேண்டும். விரைவில் திருப்பணிகள் தொடங்கி, கும்பாபிஷேகம் நடக்க வேண்டும். பக்தர்களைக் காக்கும் பெம்மான்களை உறைவிடத்தில் தக்கபடி காக்க வேண்டியது நம் பொறுப்புத்தானே!

கருவூர்த் தேவர் வரலாறு

கருவூர்த் தேவர் என்றும் கருவூரார் கொங்கு நாட்டில் உள்ள கருவூரில் பிறந்தவர். இவர் அந்தணர். வேதாகமக் கலைகள் பலவற்றையும் கற்றுத் தேர்ந்தவர். மிகப்பெரிய யோக சித்தர். போக முனிவரிடம் உபதேசம் பெற்று ஞான நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து சிவயோக முதிர்வடைந்து காய கல்பம் உண்டவர். பல சித்திகள் கைவரப் பெற்றவர். இவர் கொங்கு நாடு, வட நாடு, தொண்டை நாடு, நடுநாடு முதலிய நாடுகளில் உள்ள தலங்களைத் தரிசித்து , தென்பாண்டி நாட்டுத் திருப்புடை மருதூர்சென்று இறைவனிடம் திருவடி தீட்சை பெற்றவர். தஞ்சையில் முதலாம் ராஜராஜ சோழன் கட்டியுள்ள இராஜ ராஜச்சுரத்துப் பெருவுடையார் கோயிலை நிர்மாணிக்கப் பெரிதும் உதவி அக்கோயில் கும்பாபிஷேகத்தையும் செய்தவர்.

இவருடைய உருவச் சிலை கருவூர் பசுபதிஸ்வரர் கோயிலிலும், தஞ்சைப் பெரிய கோயிலினும் இடம் பெற்றுள்ளது. இவர் கோயில் திருக்களந்தை, ஆதித்தேச்சுரம், திருக் கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திருமுகத் தலை, திரைலோக்கிய சுந்திரம், கங்கை கொண்ட சோழேச்சுரம், திருப்பூவணம் [மதுரை] அருகில் திருச்சாட்டியக்குடி, தஞ்சை, திருவிடை மருதூர், ஆகிய தலங்களுக்குச் சென்று திருவிசைப்பா இசைத்துத் திருப்பதிக்ங்கள் பாடியுள்ளார். இவை யாவும் ஓன்பாதம் திரு முறையில் இடம் பெற்றுள்ளன. பஞ்ச புராணம் பாடும் முறை அமைப்பில், கருவூர்த் தேவரின் திருவிசைப்பாவும், சேந்தனாரின் திருப்பல்லாண்டும் தனித்தனியே இடம் பெறுவது குறிப்பிடத் தக்கது.

இவர் கி.பி.10 ம் நுற்றாண்டின் கடைப்பகுதியிலும் பதினொன்றாம் நுற்றாண்டின் முற்பகுதியினும் வாழ்ந்திருக்கலம் என்று நம்பப்படுகிறது. சித்தர்கள் பற்றிய நூலினும் கருவூர்த் தேவர் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், இதில் சொல்லப்பட்ட கருவூராரும், திருவிசைப்பாபாடிய கருவூராரும் ஒருவரா என்று நிர்ணயிக்கப்படவில்லை. வெவ்வேறானவர் என்றே பெரிதும் வழங்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரைலோக்கிய சுந்தரம்

திருவிசைப்பா

பண் காந்தாரம் [9ஆம் திருமுறை]

கருவூர்த்தேவர்

1 நீராங்கி வளர்கமல நீர்பொருந்தாத் தன்மையன்றே
ஆரோங்கி முகமலர்ந்தாங் கருவினையேன் திறமறந்தின்று
ஊரோங்கும் பழிபாரா துன்பாலே விழிந்தொழிந்தேன்
சீரோங்கும் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

2 நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

3 அம்பளிங்கு பகலோன்பால் அடைப்பற்றாய் இவள் மனத்தின்
முன்பளிந்த காதலுநின் முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளிந்த கனியேயென் மருந்தேநல் வளர்முக்கண்
செம்பளிங்கே பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

4 மைஞ்ஞின்ற குழலாள்தன் மனத்தரவும் வளைதாராது
இஞ்ஞின்ற கோவணவன் இவன்செய்த தியார்செய்தார்
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லா மெய்ஞ்ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞின்றி யிலன்கோடை திரைலோக்கிய சுந்தரனே!

5 நீவாரா தொழிந்தாலும் நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்தும் குவளைமலர் சொரிந்தனவால்
ஆவாவென் றருள்புரியாய் அமரர்கணந் தொழுதேத்தும்
தேவாதென் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

6 முழுவதுநீ யாயினுமிம் மொய்குழலாள் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள் பயில்வதுநின் னொருநாமம்
அழுவதுநின் திறநினைந்தே அதுவன்றோ பெறும்பேறு
செழுமதில்சூழ் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

7 தன்சோதி யெழுமேனித் தபனியப்பூஞ் சாய்க்காட்டாய்
உன்சோதி எழில்காண்பான் ஓலிடவும் உருக்காட்டாய்
துஞ்சாகண் இவளுடைய துயர்திரு மாறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

8 அரும்பேதைக் கருள்புரியா தொழிந்தாய்நின் அவிர்சடைமேல்
நிரம்பாத பிறைதுாவு நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலும் உயிர்ஈர்ந்தாய் நவிர்புரிசைக் குவிவனம்பா
திரம்போது சொரிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9 ஆறாத பேரன்பி னவர்உள்ளங் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ வீற்றிருத்தி அதுகொண்டு
வீறாடி இவளுன்னைப் பொதுநீப்பான் விரைந்தின்னம்
தேறாள்தென் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

10 சரிந்ததுகில் தளர்ந்தஇடை அவிழ்ந்தகுழல் இளந்தெரிவை
இருந்தபரி சொருநாள்கண் டிரங்காய்எம் பெருமானே!
முரிந்தநடை மடந்தையர்தம் முழங்கொலியும் வழங்கொலியும்
திருந்துவிழ வணிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

11 ஆரணத்தேன் பருகிஅருந் தமிழ்மாலை கமழவரும்
காரணத்தின் நிலைபெற்ற கருவூரன் தமிழ்மாலை
பூரணத்தால் ஈரைந்தும் போற்றிசைப்பார் காந்தாரம்
சீரணைந்த பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறைத் திரட்டு

நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கண் பிறப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவா தரர் திருத்தாள் போற்றி

விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

நங்க டம்பனைப் பெற்றவன் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகுஎறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்முதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்[து]
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து

தலம்ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டிய தூணின்
நான்று எழுபாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்[து]
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்து எனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

திரு நீற்றுப் பதிகம்

திருஆலவாய் பண்—காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான்திரு நீறே. [1]

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. [2]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. [3]

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. [4]

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. [5]

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. [6]

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே. [7]

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் கும் திரு மேனிஆல வாயான் திருநீறே. [8]

மாலொடு அயனறி யாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம் துண்ட மிடற்றெம் ஆலவா யான்திரு நீறே. [9]

குண்டிகைக் கையர் களொடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவா யான்திருநீறே. [10]

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின் தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. [11]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் – காந்தார பஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. [1]

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன்அஞ்சு ஆடுதல்
கோவிலுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே. [2]

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின்று அறுப்பது நமச்சி வாயவே. [3]

இடுக்கண்பட்டு இருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரான்என்று வினவுவோம் அல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளின் நாம்உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. [4]

வெந்தநீறு அருங்கலம் விரதி கட்குஎலாம்
அந்தணர்க்கு அருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழ நீள்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சி வாயவே. [5]

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாள்தொறும் நல்கு வான்நலம்
குலமில ராகிலும் குலத்திற்கு ஏற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. [6]

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே. [7]

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. [8]

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங்கு அடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. [9]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தான்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக்கு இடுக்கண் இல்லையே. [10]

போற்றித் திருத்தாண்டகம்
[திருக்கயிலாயம்]

திருநாவுக்கரசர் திருவையாற்றில் கயிலைக் காட்சி கண்டு தொழுது பாடியவை. எல்லா தீவினைகளையும் போக்கி பதி புண்ணியத்தை நல்கும் அற்புதப் பதிகம்.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள்என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி [1]

பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவிஎன் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. [2]

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவிஎன் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி ஓடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. [3]

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத் தீயாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. [4]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பெயராதுஎன் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவியான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி [5]

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்உயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
பல்உயிராய் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்உயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி [6]

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நில னுந் தீஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி [7]

இமையாது உயிராய் இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத்தணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா வருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. [8]

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழுந்தேவே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவாஅடி யேனுக்கு எல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி [9]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. [10]

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்து உகந்தீசா போற்றி
பண்ணார்இசையின் சொற்கேட்டாய் போற்றி
பண்டேஎன் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. [11]

நின்ற திருத்தாண்டகம் [ஸ்ரீருத்ரம்]

[இப் பதிகத்தில் இறைவன் உலகமாய் நின்ற நிலையினை வகுத்துக் கூறுகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள். சிவாலய வழிபாட்டில் அபிடேகக் காலங்களில் பாராயணம் செய்யத் தக்கது.]

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே. [1]

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக் கோர்மணி யுமாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணு மாகிப்
பிரளயத்துக் கப்பாலோ ரண்ட மாகிப்
எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்து மாகி
யெழுஞ்சுடராயெம்மடிகள் நின்ற வாறே. [2]

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய்க் கால்ஆறாய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றும் கெடுத்தானாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுலாவாகிக் சுலாவுக்கோர் சூழலாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே. [3]

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகட லாய்க்குரை கடற்கோர் கோமானுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பி னுச்சி யாகி
ஏற்றானா யேறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. [4]

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக் கோர்தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறுந் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடி ராய்நிமிர்ந் தடிகள் நின்றவாறே. [5]

அங்கமா யாதியாய் வேத மாகி
அருமறையோ டைம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
பால்மதி யோடாதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழிவு மாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. [6]

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித் தோலாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனிதனாகி
யாதானு மெனநினைந்தார்க் கெளிதேயாகி
அழல்வண்ண வண்ணர்தாம் நின்ற வாறே. [7]

ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
அறிவாகி அழலாகி அவியு மாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோனாகிப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குவால் வாசமாய் நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே. [8]

நீராகி நீளகலந் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பி னுச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கள் மூன்றினையு மெய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தோர் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்லவெம் மீச னார்தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே. [9]

மாலாகி நான்முக னாய்மா பூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி யெண்டிசைக்கும் எல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோக மாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானே யாகி
ஏலா தன வெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ் சுட ராய்எம் மடிகள் நின்றவாறே. [10]

திருஅங்கமாலை
பண்—சாதாரி

தலையே நீ வணங்காய் — தலைமாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

கண்காள் காண்மின்களோ — கடல்நஞ் சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னை
கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ — சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் திறமெப்பொதுஞ்
செவிகாள் கேண்மின்களோ

மூக்கே நீமுரலாய் — முதுகாடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய்

வாயே வாழ்த்து கண்டாய் — மதயானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்றன்னை
வாயே வாழ்த்து கண்டாய்

நெஞ்சே நீ நினையாய் — நிமிர்புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கைகாள் கூப்பித்தொழீர் — கடிமாமலர் தூவிநின்று
பைவாய்ப் பரம்பரை யார்த்த பரமனைக்

கைகாள் கூப்பித் தொழீர்

இவ்யாக்கையாற் பயனென் — அரன்கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டிப் போற்றி யென்னாத

இவ்யாக்கையாற் பயனென்

கால்களாற் பயனென் — கறைக்கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகணஞ்சூழாக்

கால்களாற் பயனென்

உற்றா ராருளரோ — உயிர் கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு

உற்றா ராருளரோ

இறுமாந் திருப்பன்கொலோ — ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டு
சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்

இறுமாந் திருப்பன்கொலோ

தேடிக்கண்டு கொண்டேன் — திருமாலொடு நான்முகனும்
தேடித்தே டொணாத் தேவனை யென்னுளே

தேடிக்கண்டு கொண்டேன்.

திருச்சிற்றம்பலம்
கோளறு திருப்பதிகம்

பொது [திருமறைக்காடு] பண்—பியந்தைக் காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. [1]

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டோ [டு] ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. [2]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்திசெய மாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. [3].

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்
நதியோடு கொன்றைமாலை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. [4]

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. [5]

வாள்வரி அதள தாடை வரிகோ வனத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையொடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. [6]

செப்பின முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பின மதியுமப்பும் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. [7]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழஇலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. [8]

பலபல வேடமாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடுஎருக் கும்முடி மேலணிந்தஎன்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. [9]

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய் வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. [10]

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாணிக்கவாசகர் அருளிய
சிவபுராணம்
திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வா அழ்க நாதன்தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குரு மணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்

கண் நுதிலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கு ஒலியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரம் ஆகிப்
பலவிருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனும் விமலா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொய்யா யினஎல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல் விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்! வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடியமாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறம் தோல் போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடைந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆனதத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவு இலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தைபெருமானே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எங் காவலனே காண்பரிய பேரொளியே!
ஆற்று இன்ப வெள்ளமே! அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத்தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா! அரனே! ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடும்நாதனே
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே! ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ் [11]
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

பஞ்ச புராணத் திரட்டு
விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

ஞாயிறு
தேவாரம்

ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர்மழுப் படையினானே
ஆதியே அமரர் கோவே அணியணா மலையுளானே
நீதியால் நின்னையல்லால் நினையுமா நினைவிலோனே. –அப்பர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாசகம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத்தய்னு மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

–மாணிக்காவசகர்

திருவிசைப்பா

மண்டலத் தொளியை விலக்கியான் நுகர்ந்த
மருந்தை என் மாறிலா மணியைப்
பண்டலர் அயன் மாற்கு அரிதுமாய் அடியவார்க்கு
எவியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலை யூராளும்
கொண்டலங் கண்டத்து எம் குருமணியை
குறுக வல்வினை குறுகாவே.

–சேந்தனார்

திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்தபொருள் அளவு
இல்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

–சேந்தனார்

பெரிய புராணம்

தேடிய அயனும் மாலும் தெளிவுறா ஐந்தெழுத்தும்
பாடிய பொருளாய் உள்ளான் பாடுவாய் நம்மை என்ன
நாடிய மனத்தராகி நம்பியாரூரர் மன்றுள்
ஆடிய செய்யதாளை அஞ்சலி கூப்பி நின்று

– சேக்கிழார்

திங்கள்

தேவாரம்

வட்டனைம் மதி சூடியை வானவர்
சிட்டனைத் திருவண்ணாமலையானை
இட்டனை இகழ்ந்தார் புரமூன்றையும்
அட்டனை அடியேன் மறந்துய்வனோ

– அப்பர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாசகம்

திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மான் இம்மா நிலமுழுதும்
நிகழப் பணி கொண்டென்னை யாட்கொண்டு
ஆவா வென்றே நீர்மையெல்லாம்
புகழப் பெறுவ தென்று கொல்லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

— மாணிக்கவாசகர்

திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்து அயன் தேட
அங்கனே பெரிய நீ சிறிய
என்னையாள் விரும்பி என் மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம் மாலறியா ஒருவனாம் இருவா!
முக்கணா நாற்பெருந்தடந் தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே.

— கருவூர்த்தேவர்

திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

— சேந்தனார்

பெரியபுராணம்

நீதி மாதவர் நெஞ்சிற் பொலிந்தன
வேதி யாதவர் தம்மை வேதிப்பன
சோதியாய் எழுஞ் சோதியுட் சோதிய
ஆதி மாலயன் காணா அளவின.

— சேக்கிழார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செவ்வாய்

தேவாரம்

தேனைக் காவல் கொண்டு விண்
கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றார்
அறியா நெறியானே
ஆனைக்காவில் அரனே பரனே
அண்ணா மலையானே
ஊனைக் காவல் கைவிட்டுன்னை
உகப்பார் உணர்வாரே — சுந்தரர்

திருவாசகம்

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பரியப் பரிமேற்கொண்டான் தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்.

— மாணிக்கவாசகர்

திருவிசைப்பா

எவரும்மா மறைகள் எவையும்வான வர்கள்
ஈட்டமும் தாட்டிருக் கமலத்
தவரும் மாலவனும் அறிவரும் பெருமை
அடலழல் உமிழ் தழற் பிழம்பர்
உவரிமா கடலின் ஓலிசெய்மா மறுகில்
உறுகவிற்று அரசினது ஈட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. — கருவூர்த்தேவர்

திருப்பல்லாண்டு

சேலுங் கயனுந் திளைக்கும்
கண்ணார் இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மானும் அயனும் அறியா நெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பானும் அமுதமும் ஒத்து
நின்றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. சேந்தனார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரியபுராணம்

நாதர் மருவுந் திருமலைகள் நாடும் பதிகள்பல மிகவும்
காதல் கூரச் சென்றிறைஞ்சிக் கலந்த இசைவண்டமிழ் பாடி
மாதொர்பாக அருளாலே வடபால் நோக்கி வாகீசர்
ஆதிதேவர் அமர்ந்த திருவண்ணாமலை நண்ணினார். —சேக்கிழார்

புதன்
தேவாரம்

ஞானத்திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத்திரளை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள் போலும்
ஏனத்திரளோடின மான் கரடி இழியும் இரவின்கண்
ஆனத்திரள் வந்தணையும் சாரல் அண்ணாமலையாரே. — சம்பந்தர்

திருவாசகம்

பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆராலுங் காண்டற்கரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென்னுளம் புகுந்த
ஆராவமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்.

— மாணிக்கவாசகர்

திருவிசைப்பா

கள்ளவிழ் தாமரைமேற்
கண்டு அயனொடு மால்பணிய
ஒள்ளெரியின் நடுவே
உருவாய் பரந் தோங்கியசீர்த்
தெள்ளிய தண்பொழில் சூழ்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலத்
துள்ளெரி யாடுகின்ற
ஒருவனை யுணர்வரிதே. —திருவாலி அமுதனார்

திருப்பல்லாண்டு

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந் திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங் குழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக்கு அமுதை என் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்து அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. —சேந்தனார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரியபுராணம்

செங்கண் விடையார் திருவண்ணாமலையைத் தொழுது வலங்கொண்டு
துங்கவரையின் மிசையேறித் தொண்டர் தொழும்புக்கெதிர் நிற்கும்
அங்கண் அரசை தொழுதெழுந்து திளைத்துத் திருநாவுக்கரசர்
தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார் –சேக்கிழார்

வியாழன்

தேவாரம்

பூவார் மலர்கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மவர்க்கருள் செய்தார்
தூமாமழை நின்றதிர வெருவித்தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந்தணையும் சாரல் அண்ணாமலையாரே. – சம்பந்தர்

திருவாசகம்

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனையாட் கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதுங்காண்அம்மானாய்.
– மாணிக்கவாசகர்

திருவிசைப்பா

நெடி யானோடு நான் முகனும்
வானவரும் நெருங்கி
முடியான் முடிகள் மோதி உக்க
முழுமணியின் திரளை
அடியார் அலகினால் திரட்டும்
அணிதில்லை அம்பலத்துக்
கடியார் கொன்றை மாலையானைக்
காண்பதும் என்றுகொலோ. – கண்டராதித்தர்.

திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார்? அமரர் குழத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே. – சேந்தனார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரிய புராணம்

ஆதிமூர்த்தி கழல் வணங்கி அங்கன் இனிதின் அமருநாள்
பூதநாதரவர் தம்மை பூவார்மலராற் போற்றிசைத்துக்
காதலால் அத்திருமலையிற் சிலநாள் வைகிக்கமழ்கொன்றை
வேதகீதர் திருப்பதிகள் பிறவும் பணியு விருப்புறுவார்.

— சேக்கிழார்

வெள்ளி

தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ம் அறுமே.

திருவாசகம்

செங்கணெடுமாலுஞ் சென்றிடந்தும் காண்பரிய
பொங்குமலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்குதிரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்

— மாணிக்கவாசகர்

திருவிசைப்பா

வைத்த பாதங்கள் மாலவன்
காண்கிலன் மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந்து இன்னமும்
துதிக்கின்றார் எழில் மறை அவற்றாலே
செய்த்தலைக் கமலம் மலர்ந் தோங்கிய
தில்லை யம்பலத் தானைப்
பத்தியாற் சென்று கண்டிட
என்மனம் பதைபதைப் பொழியாதே!

— திருவாலி அமுதனார்

திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிலலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்?
ஊரும் உலகுங் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரிய புராணம்

அண்ணாமலை அங்கமரர் பிரான் வடிவு போன்று தோன்றுதலும்
கண்ணால் பருகிக் கைதொழுது கலந்து போற்றுங் காதலினால்
உண்ணாமுலை யாள் எனும் பதிகம் பாடித் தொண்டருடன் போந்து
தெண்ணீர் முடியார் திருவண்ணாமலையைச் சென்று சேர்வுற்றார்

— சேக்கிழார்

சனி
தேவாரம்

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம் நமதுள்ள வினைகளே.

— அப்பர்

திருவாசகம்

மைப்பொலியும் கண்ணிகேள் மாலயனோடிந்திரனும்
எப்பிறவியுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண்டினிப் பிறவாமே காத்து
மெய்பொருட் கட்டேற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நஞ்சிவனைப் பாடுங்காண் அம்மானாய்.

— மாணிக்கவாசகர்.

திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலா கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம்சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

— சேந்தனார்

திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டு
ஓலமிட்டு இன்னம் புகலரிதாய்
இரந்திரந்து அழைப்ப என்னுயிராண்ட
கோவினுக்கென் செயவல்ல மென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரியபுராணம்

அண்ணாமலை மேல்அணிமலையை ஆரா அன்பின் அடியவர்தம்
கண்ணார் அமுதை விண்ணோரைக் காக்க கடலில் வந்தெழுந்த
உண்ணா நஞ்சம் உண்டானைக் கும்பிட்டுருகும் சிந்தையுடன்
பண்ணார் பதிகத் தமிழ்பாடி பணிந்துபரவி பணிசெய்தார்.

– சேக்கிழார்

திருச்சிற்றம்பலம்

பொது


வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

ஆறிரு தடங்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க வெல்வேல்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாசிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியாரெலாம்.

வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான்புகழ்கேட்டறி வார்செவிகள்
வாழி அவனை வணங்கும் முடிச்சென்னி
வாழி அவன் சீர்பாடும் வாய்.


திருச்சிற்றம்பலம்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy





கிருஷ்ணா பிரிண்டர்ஸ்

Krishna PrinterS

42-A, M.G.R. Road, Nanganallur, Chennai - 600 061.


DTP (TAMIL, ENGLISH & HINDI)


Binding


Offset Printing


Screen Printing

மாதாந்திர மற்றும் தினசரி காலண்டர்கள்
நிறைந்த தரத்துடன், சிறந்த முறையில்
பிரிண்ட் செய்து தருகிறோம்.



2232 2668

CELL :

9444 36 39 38